**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**
**முன்னிலை: திருமதி.R.D.குருலட்சுமி M.A.,M.L., PGDI & CL.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்புவனம்**
**2024ம் ஆண்டு ஜனவரி மாதம் 30 -ம் நாள் செவ்வாய்கிழமை**
**திருவள்ளுவர் ஆண்டு, 2054, ஸ்ரீ சோபகிருது வருடம், தை மாதம் 16 - ம் நாள்**
**இ.ம.எண். 9/2022 இன் மு.வ.எண். 221/2019**

ஜெயஹக்சர் .... மனுதாரர் / பிரதிவாதி

... எதிர் ...

1. இந்திரா ... 1ம் எதிர்மனுதாரர் / வாதி

2. நடராஜன் ... 2ம் எதிர்மனுதாரர் / சேர்க்கப்பட வேண்டிய நபர்

இம்மனு என்முன்பு 18.04.2022 அன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்/பிரதிவாதிக்காக வழக்கறிஞர் திரு.பி.ஜெயக்குமார், திரு.வி.சிதம்பரம், திரு.ஏ.பாலமுருகன் ஆகியோர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/வாதிக்காக வழக்கறிஞர் திரு.எம்.குருதாஸ் அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆனந்தஇளங்கோ அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு தரப்பு வாதங்கள் கேட்டும், இருதரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

2 ம் எதிர்மனுதாரரை, அசல்வழக்கில் அவசியதரப்பினராக சேர்த்துக்கொண்டு, அசல்வழக்கை மேல் நடத்த அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1.** மனு மற்றும் அபிடவிட்டின் சுருக்கம்:

தாவாசொத்தை 2 ம் எதிர்மனுதாரர் 24.06.2019ம் தேதியிட்ட ஆவணம் மூலம் மனுதாரரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார். எனவே தற்போது மனுதாரர் உடைமையிலும், உரிமையிலும் இல்லை. எனவே 2ம் எதிர்மனுதாரரை அவசியதரப்பினராக சேர்க்க இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இல்லையேல் பெருத்த கஷ்டநஷ்டம் ஏற்படும். எனவே மேற்படி 2ம் எதிர்மனுதாரரை அவசியதரப்பினராக சேர்த்துக் கொண்டு வழக்கை நடத்த அவசியமாக உள்ளது.

**2.** 1 -ம் எதிர்மனுதாரர்/ வாதி தரப்பு மறுப்புரையின் சுருக்கம்:

மனுவில் கூறியுள்ள விசயங்கள் மறுக்கப்படுகிறது. மனுதாரரிடமிருந்து 24.06.2019 ம் தேதியிட்டு 2ம் எதிர்மனுதாரர் கிரையம் பெற்றதாகவும் எனவே வழக்கறிஞரின் ஆலோசனையின் பேரில் அவரை தரப்பினராக சேர்த்திருப்பதாகவும், கூறியிருப்பதில் வழக்கு நிலுவையில் இருக்கும் போது பெற்றிருக்கும் கிரையம் பிரிவு 52 சொத்துரிமை மாற்று சட்டத்தின்படி சி.நடராஜன் என்பவரையும் கட்டுப்படுத்தக் கூடியதாகும். பிரிவு 52 லேயே வழக்கு நிலுவை என்பதற்கான விளக்கம் சொல்லப்பட்டுள்ளது. அசல்வழக்கு 2017ம் வருடம் மானாமதுரை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் மு.வ.எண்.30/2017 ஆக தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் மு.வ.எண்.221/2019 ஆக நிலுவையில் இருந்து வருகிறது. பிரிவு 52 சொத்துரிமை மாற்று சட்டத்தின்படி சி.நடராஜன் அவசியதரப்பினர் இல்லை. இது குறித்து (1992) 2 SCC 524, (1999) 2

R D GURULAKSHMI Digitally signed by R D GURULAKSHMI Date: 2024.01.30 17:13:22 +0530

SCC 577, (2001) -1-LW62, (2003) 3-LW -773, (1997) 2 LW691, (1995) 5 SCC 539ஆகிய வழக்குகளில் முடிவு காணப்பட்டுள்ளது.

அசல்வழக்கில் எழுவினாக்கள் வனையப்பட்டு நிலுவையில் இருந்து வரும் நிலையில் மேற்படி சி.நடராஜன் பெயரில் உள்ள கிரைய ஆவணம் வாதியின் உரிமையை முடிவு செய்ய தேவையற்றதாகும். பிரதிவாதி 16.04.2018ம் தேதியிட்டு எதிர்வழக்குரையும், 20.12.2021, 30.12.2021 ஆகிய தேதிகளில் கூடுதல் எதிர்வழக்குரைகளையும் தாக்கல் செய்துவிட்டு, பின்னிட்டு சி.நடராஜன் பெயரில் கிரைய ஆவணம் ஏற்படுத்தியுள்ளார். சி.நடராஜன் பற்றி எதிர்வழக்குரையிலோ, கூடுதல் எதிர்வழக்குரையிலோ குறிப்பிடவில்லை. இவ்வழக்கில் அவசியதரப்பினரை சேர்க்கவில்லை என்ற எழுவினாவும் இல்லை. அவர் இவ்வழக்கை முடிவு செய்வதற்கு அவசியதரப்பினர் இல்லை. இம்மனு சட்டப்படி நிலைநிற்கதக்கதல்ல. எனவே கூடுதல் செலவுத்தொகையுடன் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**<u>3. 2ம் எதிர்மனுதாரர் மறுப்புரையின் சுருக்கம்:</u>**

தாவாசொத்து அதன் அருகில் உள்ள சொத்துக்கள் ஆதித்தனார் கல்வி குழுமம் அதன் தலைவர் சிவந்திஆதித்தன் பெயரில் இருந்தது. தாவாசொத்து 96 சென்டும் வீரணன் அம்பலத்திற்கு பாத்தியப்பட்டு, அவரது 2 மகன்கள் ஆளுக்கு 48 செண்ட் வீதம் பிரித்ததில் வடபுறம் 48 செண்ட் ஊர்காவலன் அம்பலத்திற்கும் தென்புறம் 48 செண்ட் அய்யாவு (எ) வீரணன் அம்பலத்திற்கும் பாத்தியப்பட்டிருந்து, 12.10.1960ம் தேதியிட்ட கிரைய ஆவணம் மூலம் வடபுறம் பகுதி காளியம்மாள் பெயருக்கு கிரையம் செய்யப்பட்டுள்ளது. காளியம்மாள் ஆதித்தனார் கல்வி குழுமத்திற்கு 27.06.1966 ம் தேதியிட்ட கிரைய ஆவணம் மூலம் பாத்தியப்படுத்தியுள்ளார். மனுதாரர் 18.04.1994ம் தேதியிட்ட கிரைய ஆவணம் மூலம் பெற்றுள்ளார். மேற்படி மனுதாரர் 01.06.2009ம் தேதியிட்ட ஆவணம் மூலம் அடமானம் வைத்து, பின்னிட்டு 24.06.2019ம் தேதியிட்ட கிரைய ஆவணம் மூலம் இந்த எதிர்மனுதாரருக்கு பாத்தியப்படுத்தியுள்ளார். இந்த எதிர்மனுதாரரே உடைமையில் உரிமையில் வைத்து அனுபவித்து வருகிறார். எனவே இந்த எதிர்மனுதாரரை அசல்வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டும்.

**4.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி என்னவென்றால் மனுதாரர்கள் கோரும் பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**5.** இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. தாவாசொத்தை 2 ம் எதிர்மனுதாரர் 24.06.2019ம் தேதியிட்ட ஆவணம் மூலம் மனுதாரரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளதாகவும், எனவே 2ம் எதிர்மனுதாரரை அசல்வழக்கில் சேர்க்கக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் மனுவை அனுமதிக்கக் கோரி வாதிடப்பட்டது. பிரிவு 52 சொத்துரிமை மாற்று சட்டத்தின்படி சி.நடராஜன் என்பவரையும் இவ்வழக்கு கட்டுப்படுத்தும் என்பதால் அவர் அவசியத்தரப்பினர் இல்லை என்றும் மனுவை தள்ளுபடி செய்யக் கோரி 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது. இவ்வழக்கில் தாவாசொத்தை 2 ம் எதிர்மனுதாரர் 24.06.2019ம் தேதியிட்ட ஆவணம் மூலம் மனுதாரரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளதாகவும், எனவே 2ம் எதிர்மனுதாரரை அவசியதரப்பினராக சேர்த்து உத்தரவிடக் கோரி 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

**6.** பிரிவு 52 சொத்துரிமை மாற்று சட்டத்தின்படி சி.நடராஜன் என்பவரையும் இவ்வழக்கு கட்டுப்படுத்தும் என்பதால் அவர் அவசியத்தரப்பினர் இல்லை என்பது குறித்து (1992) 2 SCC 524,

R D GURULAKSHMI
Digitally signed by R D GURULAKSHMI
Date: 2024.01.30 17:13:33 +0530

(1999) 2 SCC 577, (2001) -1-LW62, (2003) 3-LW -773, (1997) 2 LW691, (1995) 5 SCC 539 ஆகிய வழக்குகளில் உள்ள முடிவுகள் இவ்வழக்கிற்கும் பொருந்தும் என்றும் கூறி 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது. அசல்வழக்கு 2017ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு நிலுவையில் இருக்கும் போது 2ம் எதிர்மனுதாரர் கிரையம் பெற்றுள்ள நிலையில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை (2001) 1 LW 62, மற்றும் மாண்பமை உச்சநீதிமன்ற (1996)5 SCC 539 ஆகிய தீர்ப்புகள் இவ்வழக்கிற்கு பொருந்தும் என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது. மேலும் அசல்வழக்கு 2017ம் வருடம் தாக்கல் செய்து வாதி முதல்விசாரணை செய்யப்பட்டு, குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டு கூடுதல் சாட்சி விசாரணைக்காக வழக்கு நிலுவையில் இருந்து வரும் நிலையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அசல்வழக்கை காலம்கடத்த வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

இறுதியாக, இம்மனுவை வாதி செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தர்-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2024-ம் ஆண்டு ஜனவரி மாதம் 30 -ம் நாள் செவ்வாய்கிழமை திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

R D GURULAKSHMI Digitally signed by R D GURULAKSHMI Date: 2024.01.30 17:13:43 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:** இல்லை

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:** இல்லை

R D GURULAKSHMI Digitally signed by R D GURULAKSHMI Date: 2024.01.30 17:13:53 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்.